முருகப்பெருமான் துணை

**மகான் சுக்கிர பகவான் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.09.2022**, வியாழக்கிழமை

1. யோகராசனே உலகை மீட்டிட
   உயிர்கொலை நீக்கிடும் ஞானவழியை
   வாகுடனே மக்கள் அடையும் வண்ணம்
   வள்ளலாய் அருளும் அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அகிலமதில் சுபகிருது யாளி திங்கள்
   வரங்களென முப்பான் திகதி குருவாரம்

   **(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 30 நாள், 15.09.2022 வியாழக்கிழமை)**

   வழங்குவேன் சுக்கிரபகவான் யானும்
3. யானும் அருளாசி தன்னை
   உலகோர் பயனுற வேண்டி உரைப்பேன்
   ஞானவழித் தேடி அலைந்து திரிந்து
   நன்மைகிட்டா கலங்கும் மானுடக் கூட்டமே
4. கூட்டமாய் கூடும் சந்தை போல
   குருமார்க்கம் என்று பல போலி
   கட்டம் தரும் வழிகளில் உழன்று
   கடைசியில் மூச்சை விட்டு பிறவித் தொடரும்
5. தொடரும் அவலங்கள் விலகி
   தூய ஞான வழிகிட்டி நலம்பெற
   இடரோ தடையோ ஞானவழி
   எந்தவித சருக்கலும் வாராதுமீள
6. மீளவே முருகப்பெருமானின் அவதார
   முழுமை கண்ட ஞானி அரங்கன்
   காலனை வெல்லும் பலமாக
   கந்தனை காட்டும் குருவாக அருள
7. அருளுகின்ற உயர்நெறி சன்மார்க்க
   அருட்தயவு ஊட்டி வளர்க்கின்ற
   இருளெனும் பிறவிப் பிணி விரட்டி
   ஈதூழே பிறவாப் பேறு தருகின்ற
8. தருகின்ற உண்மை வழிகள் தன்னை
   தவதரும பலமாக அருளி வரம்
   தருகின்ற அரங்கமகான்தனை அனுகி
   தத்துவமிகு மகாமந்திர தீட்சை ஏற்று
9. ஏற்றுமே ஞானிகள் பூசைதனை
   இடைவிடா அனுதினம் செய்து
   பற்று நீக்கும் மாதரும சேவைதனை
   பழுதில்லா செய்து கொண்டு வருக

10. வருகவே பிறவிதனை தொடரும்
வழிவகைகள் தடைபட்டுமே
தருமபலம் அரங்கமகான் குருபலம்
தணிகாசலனை அடையும் பலமாக

11. ஆகவே வல்லமை பெருகி
அகிலத்தை மாற்றுகின்ற நல்
மகான்கள் வழி மகான்களாக தேறி
மண்ணுலகினில் ஞான ஆட்சி படைப்பீர்
அருளாசி முற்றே

—சுபம்—